இனிமையான குழந்தைகளே! ஞானத்தின் மூன்றாவது கண் மூலம் தந்தையைப் பாருங்கள். தந்தையை மட்டுமே நினைவு செய்யுங்கள். இந்த சரீரத்தைப் பார்த்தும் பார்க்காதிருங்கள்.

கேள்வி: இந்தப் பழைய உலகத்தில் இருக்கும் போது குழந்தைகளாகிய உங்களுக்கு எந்த ஒரு கட்டளை கிடைத்துள்ளது?

பதில்: இனிமையான குழந்தைகளே, நீங்கள் வசிக்கும் இந்தப் பழைய உலகம் சுடுகாடாக ஆகப் போகிறது, இதில் இராவண இராஜ்யம் உள்ளது. இதன் மீது மனதை ஈடுபடுத்தாதீர்கள். இங்கே இருந்து கொண்டு புத்தியின் பற்றுதல் புது உலகத்தின் மீது செல்ல வேண்டும். இல்லற விவகாரங்களில் இருங்கள், ஆனால் தாமரை மலருக்குச் சமமமாக இருங்கள். மற்ற அனைவரிடமிருந்தும் விலகி இருங்கள். புத்தியோகம் ஒரு தந்தையிடம் ஈடுபட்டு இருக்க வேண்டும். ஞான யோகத்தில் பக்கா (திறமைசா-) ஆகுங்கள். எந்த ஒரு நிலையிலும் குஷியின் அளவு குறையவே கூடாது. பொறுமையாக இருந்து கர்ம பந்தனங்களைத் துண்டித்துக் கொண்டே செல்லுங்கள்.

பாடல்: பொறுமையாக இரு மனமே........

ஓம் சாந்தி. துக்கத்தில், நோயற்றிருக்கும் போதும் பொறுமையோடு (சகித்துக் கொண்டு) இருக்குமாறு மனிதர் மற்ற மனிதருக்குச் சொல்கின்றனர். ஆனால் இங்கேயோ நீங்கள் மனிதர்களின் வழிப்படி நடப்பதில்லை. நீங்கள் ஈஸ்வரிய வழிமுறைப் படி நடக்கிறீர்கள். அது போல் அனைவரும் நடப்பதில்லை. சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குரு எனச் சொல்லப்படும் ஈஸ்வரனின் வழிமுறையோ புகழ் பெற்றதாகும். பகவான் தான் ஸ்ரீமத் கொடுத்திருந்தார். மனிதரில் இருந்து தேவதை ஆவதற்கான அல்லது தெய்வீக உலகத்தின் எஜமானர் ஆவதற்கான வழிமுறை. இவ்வளவு உயர்ந்த வழிமுறை வேறு யாரும் தர இயலாது. ஏனென்றால் மனிதர்கள் அனைவரும் தூய்மை இல்லாதவர்கள், பிரஷ்டாச்சாரி (மிகத் தாழ்ந்த வர்கள்). எனவே, அவர்கள் வழிமுறையும் கூட அது போலத் தான் தருவார்கள். நமக்கு சிவபாபா வழிமுறை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை குழந்தைகள் நீங்கள் தான் அறிவீர்கள். உயர்ந்தவரிலும் உயர்ந்த தந்தையின் உயர்ந்ததிலும் உயர்ந்த வழிமுறை. அவரையோ யாரும் பிரஷ்டாச்சாரி, தூய்மை இல்லாதவர் என்று சொல்ல மாட்டார்கள். தூய்மை இல்லாதவர்கள் தான் அந்த நிராகார் தந்தையை அழைக்கின்றனர். சாகாரின் விஷயமோ கிடையாது. அதனால் சொல்லப் படுகிறது-மனிதர்களின் வழி முறையைக் கேட்காதீர்கள் என்று. தீயதைக் கேட்காதீர் கள், தீயதைப் பார்க்காதீர்கள்...... இந்தக் கண்கள் மனிதர்களைப் பார்க்கின்றன என்ற போதிலும் உங்களுக்கு மூன்றாவது கண் கிடைத்துள்ளது. அதன் மூலம் நீங்கள் அவர்களைப் பார்க்க வேண்டும். மேலும் அந்தத் தந்தையையே நினைவு செய்ய வேண்டும். மூன்று கண்களை உடையவர்கள் வேறு யாரும் இல்லை. அந்தக் கண்கள் மூலம் தந்தையைப் பார்க்க முடியும். தந்தையைப் பார்க்க முடியும் என்று புரிந்து கொள்ளுங்கள் அவரும் ஆத்மா என்பது புத்தியில் உள்ளது இல்லையா? நீங்கள் ஆத்மாவைப் பார்க்கிறீர்கள். ஜீவாத்மா எனச் சொல்ல வேண்டும். சகோதரி என்று மட்டும் சொல்வதால் ஆத்மாவை மறந்து போகிறீர்கள். நீங்கள் இந்த சரீரத்தை மறந்து விடுங்கள்

என்று புரிய வைக்கப்படுகிறது. தன்னை ஆத்மா என உணருங்கள் மற்றும் தந்தையை நினைவு செய்யுங்கள். தெய்விகக் கண்களால் அவரைப் பாருங்கள். ஆத்மாவாகிய உங்களுக்கு இப்போது ஒளி (புரிதல்) கிடைத்துள்ளது-நம்முடைய தந்தை யார்? எங்கே இருக்கிறார்? அவரிடமிருந்து நமக்கு என்ன கிடைக்கிறது? உலகில் தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுவதற்கான முயற்சியை உங்களைப் போல் செய்பவர்கள் யாருமே இல்லை. எது வரை ஒருவர் குழந்தையாக ஆகவில்லையோ அது வரை தந்தையிடம் ஆஸ்தி எப்படிப் பெற முடியும்? தந்தையின் ஆஸ்தியோ அளவற்றது. உயர்ந்ததிலும் உயர்ந்தது சூரியவம்சி ராஜா-ராணி ஆவதாகும். வக்கீலுக்கான பரீட்சை பாஸ் செய்கின்றனர் என்றாலும் அவர்களிலும் நம்பர்வார் உள்ளனர். சிலரோ அதிகம் சம்பாதிக் கின்றனர். சிலருக்கோ வயிற்றை நிரப்புவதே கடினமாக உள்ளது. இப்போது நீங்கள் அறிவீர்கள், நாம் ஈஸ்வரனிடமிருந்து இராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். எந்த ஒரு மனிதரையும் ஒரு போதும் இது போன்று சொல்ல முடியாது-இவர் சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், மற்றும் சத்குரு, என்று. மற்ற அனைவரும் உலகாயத குருமார் தான் சத்தியத்தைச் சொல்லக் கூடிய சத்குரு ஒருவர் மட்டுமே. மற்ற அனைவரும் பொய் பேசுபவர்கள். அவர்கள் உண்மையான சத்கதியை யாருக்கும் கொடுக்க முடியாது. சத்குரு வின் மகிமையை நானும் நீங்களும் கூட அறியாமல் இருந்தோம். அவர் எப்படி சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குருவாக ஆகிறார்? என்பது யாருடைய புத்தியிலும் தோன்றாது. அவர்களோ சர்வவியாபி எனச் சொல்லி விசயத்தை முடித்து விடுகின்றனர். அவர்கள் பரமாத்மாவை தனிப்பட்டவர் எனப் புரிந்து கொள்ளவில்லை - அவர் தந்தை, நாம் குழந்தைகள் என்பதை. அனைவரும் தந்தைமார்களே எனச் சொல்லி விடுகின்றனர். இதை விடவும் தரக்குறைவாக, கல், மண்ணிலும் பரமாத்மா இருப்பதாகச் சொல்லியுள்ளனர். பாபா புரிய வைக்கிறார், அப்படி எல்லாம் கிடையாது. குழந்தை களாகிய உங்களுக்கு இப்போது நிச்சயம் ஏற்பட்டுள்ளது - நிச்சயமாக பாபா, சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்தியமான குரு ஒருவர் மட்டுமே. அவரை யாரும் அறிந்து கொள்ளவில்லை. அப்படி அறிந்து கொண்டிருந்தால் அங்கே செல்லவும் முடியும். யாருக்காவது தெரிந்திருக்கு மானால் அவருடைய பெயர், வடிவம், தேசம், காலம் பற்றி அனைவருக்கும் தெரிவிக்க முடியும். இல்லையென்றால் அறிந்து கொள்வதால் என்ன பயன் உள்ளது? மனிதர்கள் அனைவரும் துக்கத்தில் உள்ளனர். அதனால் சாந்தியை விரும்புகின்றனர். நாம் அசலில் சாந்திதாமத்தின் நிவாசிகள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அங்கிருந்து நாம் வருகிறோம். ஆத்மாக்களாகிய நம்முடைய சுயதர்மம் சாந்தி. பாபா குருமார்கள் பற்றிப் புரிய வைக்கிறார், அவர்கள் யாருக்கும் சத்கதி அளிக்க முடியாது. அவர்கள் பயமுறுத்துகின்றனர்-குருவுக்கு நிந்தனை செய்பவர்கள் நல்ல பதவி பெற முடியாது என்று சொல்கின்றனர். உண்மையில் இந்த விஷயங்கள் அனைத்தும் எல்லையற்ற தந்தை பற்றியவை, அதாவது நீங்கள் எனக்கு (தந்தையை) நிந்தனை செய்வீர்களானால் சத்யுகத்தில் உயர்ந்த பதவி பெற மாட்டீர்கள். சந்நியாசிகளோ என்னை நிந்தனை செய்தால் பதவி அடைய முடியாது. என்று சொல்ல முடியாது. எத்தகைய பதவி? அவர்களுக்கு பதவி பற்றியோ எதுவும் தெரியாது. சாதனை செய்து கொண்டே இருக்கின்றனர். ஆனால் சாதனை செய்வதால் சத்கதி அடைய முடியாது. இந்தத் தந்தை தான் வந்து பொறுமையாக இருக்க அறிவுரை அளிக்கிறார். நீங்கள் அறிவீர்கள், நிச்சயமாக

84 பிறவி களின் சக்கரம் சுற்றி வந்துள்ளோம். நாம் துக்கத்தில் இருக்கிறோம். எது வரை சுகதாமத்தின் சாட்சாத்காரம் ஆக வில்லையோ, அது வரை இது துக்கதாமம் என்று எப்படிப் புரிந்து கொள்வார்கள்? இப்போது நீங்கள் அறிவீர்கள், இது துக்க உலகம் - அல்ப காலத்தின் சுகம் தான் உள்ளது. இந்த அல்பகாலத்தின் இராஜ்யத்தில் எவ்வளவு குஷி உள்ளது! காந்தி இராமராஜ்யத்தை ஸ்தாபனை செய்தார் எனப் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் அப்படி இல்லை. இதுவோ இன்னும் மோசமான இராவண இராஜ்யமாக ஆகி விட்டுள்ளது. அனைவருமே இது தூய்மையின்றி கீழ் தரமானவர்கள் எனச் சொல்கின்றனர். முன்பு இது தூய்மை மட்டும் இல்லாமல் இருந்தது. இப்போதோ தரத்திலும் கீழானவர்கள் என்றும் சொல்கின்றனர். இது கலியுகத்தின் இறுதி. எவ்வளவு லஞ்ச லாவண்யங்கள்! தந்தை வந்து முழு உலகின் மனிதர்கள் அனைவருக்கும் சொல்கிறார்-இப்போது பொறுமையாக இருங்கள். ஆனால் அவர்கள் கேட்பதில்லை. கடைசியில் அனைவருக்கும் தெரிய வரும். கண்காட்சியிலும் கூட இதைத் தான் காட்டுகின்றனர். அதாவது எப்படி துக்கத்தின் உலகத்தை மாற்றி சுகத்தின் உலகமாக ஸ்தாபனை செய்கிறார் என்று. கடைசியில் அனைவரும் கேட்டார் கள் என்றால் சரி தான் இல்லையா? ஒரு பக்கம் மாயா அனைவரின் கழுத்தையும் பிடித்து நெரித்துக் கொண்டிருக் கிறது. இன்னொரு பக்கம் பாபா தமது அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இப்போது ஏராளமான மனிதர்களுக்கு பாபா மற்றும் உலக மாற்றத்தைப் பற்றிய செய்தி சென்று சேருமாறு சேவை செய்ய வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு மகிமை வெளி வருமோ, அவ்வளவு பிறகு செய்தித் தாள்களிலும் வேகமாக வெளிவரும். பிறகு அநேகர் வருவார்கள். இதற்காக முயற்சி செய்ய வேண்டும். தர்மம் அல்லது மடங்கள் முதலியவற்றை ஸ்தாபனை செய்வதோ மிகவும் சுலபம். பௌத்த தர்மத்தின் ஒரு சொற்பொழிவு செய்தாலே 60-70 ஆயிரம் பௌத்தர்களை உருவாக்கி விடுவார்கள். இங்கோ முயற்சி செய்ய வேண்டி உள்ளது. மாயா மிகத் தீவிரமாக எதிர்க்கிறது. அங்கோ மாயாவுடன் யுத்தத்திற்கான விஷயமே கிடையாது. இங்கே மாயாவோடு யுத்தம் செய்வதில் முயற்சி தேவைப் படுகிறது. முக்கியமான விஷயம் தூய்மையினுடையது. வேறு எந்த இடத்திலும் தூய்மையின் விஷயம் கிடையாது. அதுவோ வீட்டின் மீது வைராக்கியம் வருகிறது அல்லது ஏதாவது திருட்டு, பாவம் செய்கின்றனர் என்றால் சந்நியாசம் தாரணை செய்கின்றனர். அதனால் திருடர்களைப் பிடிப் பதற்காகவும் கூட அரசாங்கத்தில் சந்நியாசி சி.ஐ.டி. முதலியவர்களை வைத்துக் கொள்ள வேண்டி வருகிறது. தரகர்களின் ரூபத்தில், வியாபாரிகளின் ரூபத்தில் கூட சி.ஐ.டி.கள் உள்ளனர். போலீஸ் காரர்களின் குப்தமான காரியங்கள் அதிகம் நடைபெறுகின்றன. நட்பின் காரணத்தை (பொய்) சாக்கு சொல்லிக் கொண்டும் கூட தங்க வியாபாரிகளோடு சேர்ந்து கொள்கின்றனர். பிறகு அனைத்தும் தெரிய வருகிறது. தொழில் செய்பவர்கள் தொழிலும் செய்கின்றனர் என்றால் சி.ஐ.டி. வேலையும் செய்கின்றனர். உலகம் அதிகக் கஷ்டங்களில் சிக்கி யுள்ளது. நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள், இந்த அனைத்துக் கஷ்டங்களில் இருந்தும் விலகி வெகு தூரம் வந்து விட்டீர்கள். உலகத்திலோ கஷ்டத்தின் மேல் கஷ்டம். உங்களுக்கு அதிக பலன்கள் உள்ளன. அவர்களோ துக்கம் நிறைந்தவராகி இறந்து விடுகின்றனர். நீங்கள் இந்த சரீரத்தை விடுவதற்காக அமர்ந்திருக்கிறீர்கள். பழைய சரீரம் அழிந்து போகு மானால் நாம் மீண்டும் பாபாவிடம் சென்று விடுவோம். மனம் பாபாவிடமும் புது உலகத்திடமும் ஈடுபட்டிருக்குமானால் பழைய உலகம் எதற்கு உதவும்? இதுவோ பழைய

ஆடை. இதன் மீது வைராக்கியம் வந்து விடுகிறது. சந்நியாசிகளுக்கு வைராக்கியம் வீடு-வாசல் மீது வருகிறது. மனைவியை நாகப்பாம்பு எனப் புரிந்து கொண்டுள்ளனர். உங்களுடையதோ உண்மையிலும் உண்மையான வைராக்கியம். பாடப்படுகிறது - ஞானம், பக்தி, வைராக்கியம் என்று. பழைய உலகத்தின் மீது வைராக்கியம் வையுங்கள் என்ற ஞானம் கிடைக்கிறது. இது சுடுகாடாக ஆகப் போகிறது. அது எல்லைக்குட் பட்ட சந்நியாசம். அவர்களுக்கு இது தெரியாது-இந்தப் பழைய உலகம் அழிந்துவிடப் போகிறது. அவர்கள் சொல்கின்றனர், நாங்கள் வீட்டில் ஒன்றாக இருக்க முடியவில்லை என்று. அவர்களுக்கு வீட்டின் மீது தான் வைராக்கியம் உள்ளது. அவர்கள் காட்டுக்குச் சென்று விடுகின்றனர். உங்களுக்கு இது எல்லையற்ற வைராக்கியம். ஆனால் இது பற்றி யாருக்கும் தெரியாது. நீங்கள் சொல்வீர்கள், எங்களுக்கோ பழைய உலகம் முழுவதில் இருந்தும், சுடுகாட்டில் இருந்தும் வைராக்கியம் என்று. இது இராவண இராஜ்யம் பழைய உலகத்தின் மீது மனதை ஈடுபடுத்துகிற மாதிரி மூர்க்கர் யார் இருப்பார்கள்? எது வரை முழுமையாகத் தயாராகிறதோ, அது வரை. சத்யுகம் வரக்கூடிய சமயம் வந்தால் யுத்தம் ஆரம்பித்து விடும். அநேகர் எழுதுகின்றனர், வீட்டில் தான் இருக்கிறோம். ஆனால் என்ன செய்வது என்று குழம்பிப் போகிறோம். மோகம் வைக்கவில்லை என்றால் எப்படிப் பராமரிப்பது எனக் கேட்கின்றனர். பாபா சொல்கிறார், குழந்தைகளே, இங்கேயே தான் இருந்தாக வேண்டும். ஆனால் புத்தியின் ஈடுபாடு இப்போது புது உலகத்தின் மீது செல்ல வேண்டும். உண்மையான அன்பு அதன் மீது செல்ல வேண்டும். இந்தப் பழைய உலகின் மீது வைராக்கியம். தேகத்தில் இருந்தும் வைராக்கியம். ஆக, வேறென்ன பாக்கி உள்ளது? அநேகர் கேட்கின்றனர், பாபா, தாங்கள் சொல்கிறீர்கள், இரண்டு பக்கமும் (லௌகிக்-அலௌகிக்) விலகியும் அன்பாக வும் இருக்க வேண்டும் என்று. அதையோ அவசியம் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வில்லை என்றால் சந்நியாசிகள் போல் ஆகி விடுவீர்கள். இல்லறத்தில் இருந்து கொண்டே தூய்மையுடன் இருங்கள். ஆத்ம அபிமானி ஆவதற்கான புருஷார்த்தம் செய்யுங்கள். அப்போது புத்தியோகம் பாபா மீது ஈடுபட்டு விடும். நான் ஆத்மா, பாபாவிடம் செல்ல வேண்டும். பாபா சொல்கிறார், இல்லற விவகாரங்களில் இருந்து கொண்டே தாமரை மலருக்கு சமமாக தூய்மையாக ஆகுங்கள். ஞான யோகம் இல்லை என்றால் சிக்கிக் கொள்வீர்கள். ஒவ்வொருவரின் ஜாதகமும் தனித்தனியாக உள்ளது. ஒவ்வொருவருக்காகவும் யுக்தியும் கூட தனித்தனியாகக் கிடைக் கிறது. ஏதேனும் கஷ்டம் இருக்குமானால் கேளுங்கள். எந்த ஒரு சூழ் நிலையிலும் குஷியின் அளவு அதிகரிக்க வேண்டும். நாம் வீட்டுக்குச் செல்கிறோம். பிறகு புதிய ராஜதானியில் வருவோம். இன்னும் கொஞ்சம் சமயமே உள்ளது. பார்ட்டை நடிக்க வேண்டும். மோகத்தை விட்டுக் கொண்டே செல்ல வேண்டும். ஒவ்வொருவரின் கர்ம பந்தனமும் தனித்தனியாக உள்ளது. சிலருக்கு இலேசாகவும் சிலருக்கு பாரமாகவும் இருக்கும். பாபாவிடம் யுக்தி பெற்று, கர்ம பந்தனங்களைத் துண்டித்துக் கொண்டே செல்ல வேண்டும். இதில் குப்த முயற்சி வேண்டும். புத்தியை நினைவு யாத்திரையில் கொண்டு செல்வதற்கான முயற்சி வேண்டும். அடிக்கடி புத்தியோகம் துண்டிக்கப் பட்டு விடுகிறது. இப்போது முழுமையாக பக்குவம் அடைந்து விட்டால் கர்மாதீத் அவஸ்தா வந்து விடும். இப்போதோ அநேக விதமான விகல்பங் களின் புயல்கள் வருகின்றன. தூக்கமே முற்றிலும் விட்டுப் போகிறது. விகல்பங்களைத் தான் புயல்கள் எனச் சொல்கின்றனர். மற்ற சத்சங்கங்களில் இந்த விஷயங்கள் கிடையாது. அங்கே உள்ளது காதுக்கான

ரசனை. எந்த ஒரு பயனும் கிடையாது. இங்கோ இது படிப்பு, வருமானத்திற்கானது. படிப்பை காது களுக்கான ரசனை எனச் சொல்ல மாட்டார்கள். ஆக, பாபா புரிய வைக்கிறார், இது கடைசிப் பிறவி. பழைய உலகம் அழிந்து விடப் போகிறது. ஏன் ஸ்ரீமத் படி நடந்து உயர்ந்த பதவி பெறக் கூடாது? எது வரை இதில் சாமர்த்தியசாலி ஆகி விடுகிறீர்களோ, அது வரை சரீர நிர்வாகத்திற்காகக் கர்மங்கள் செய்தேயாக வேண்டும். பிறகு இந்த ஈஸ்வரிய சேவையில் ஈடுபட வேண்டும். முழு உலகையும் மீட்டெடுக்க வேண்டும். நரகத்தில் இருந்து விடுவித்து சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறீர்கள். அந்த சேல்வேஷன் ஆர்மி (மீட்பு படையினர்) இதை அறிந்திருக்கவில்லை-உலகத்தின் படகு மூழ்கி விட்டுள்ளது என்று. அனைவரும் இராவணனின் விலங்குகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். முழு உலகத்தையும் இப்போது மீட்டெடுக்க வேண்டும். இதிலோ பாபாவின் உதவி தேவை. நீங்கள் ஆன்மிக ஈஸ்வரிய சேல்வேஷன் ஆர்மி மனிதர்கள் அனைவரையும் இராவணனின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். அவ்வளவு நஷா இருக்க வேண்டும். அந்த சரீர சம்மந்தமான சமூக சேவகர்களோ ஏராளமாக உள்ளனர். நீங்கள் எவ்வளவு கொஞ்சம் பேர் இருக்கிறீர்கள்! இங்கோ மனிதர்களும் ஏராளமாக உள்ளனர். சத்யுகத்தில் மனிதர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார் கள். குறைவான எண்ணிக்கையான குழந்தைகள் நீங்கள் தான் ஆன்மிகத் தந்தையிடமிருந்து ஆஸ்தி பெறுகிறீர்கள். சோழி போல் உள்ள இந்தக் கடைசிப் பிறவியை வைரம் போல் ஆக்க வேண்டும். ஓர் ஆதி சநாதன தேவி-தேவதா தர்மத்தின் ஸ்தாபனை, அநேக தர்மங்களின் விநாசம். பாபா தான் அந்த ஒரு தர்மத்தின் ஸ்தாபனை செய்கிறார் மற்றும் செய்விக்கிறார். கன்று நடுவதில் அல்லது ஸ்தாபனை செய்வதில் மிகுந்த முயற்சி தேவைப் படுகிறது. எது வரை ஒருவரை பாபாவுக்கு சமமாக ஆக்கவில்லையோ, அது வரை குஷியின் அளவு அதிகரிக்காது. (ஞான) தானம் செய்யும் போது தான் குஷியின் அளவு அதிகரிக்கும். யாரிடம் செல்வம் உள்ளதோ, அவர் தானம் செய்யவில்லை என்றால் அவர் கருமி எனச் சொல்லப்படுவார். இங்கே பிறகு அது போல் இல்லை. யாரிடம் இருக்கிறதோ, அவரோ கொடுத்துக் கொண்டே இருப்பார். இல்லை என்றால் இவரிடமோ செல்வமே இல்லை என்று தான் நினைப்பார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஈஸ்வரிய சேல்வேஷன் ஆர்மி (மீட்பு சேனை) ஆகி உலகத்தின் மூழ்கி விட்டுள்ள படகை அக்கரை சேர்க்க வேண்டும். மனிதர்களை சோழி போன்ற நிலையில் இருந்து வைரம் போல் மாற்ற வேண்டும். ஞான செல்வத்தை தானம் செய்வதில் கருமியாக ஆகக் கூடாது.

2) தனது மனதை பாபா மற்றும் புது உலகின் மீது ஈடுபடுத்த வேண்டும். இந்தப் பழைய தேகத்தின் மீது எல்லையற்ற வைராக்கியம் உள்ளவராக ஆக வேண்டும்.

வரதானம்: தெய்வீக புத்தியின் மூலம் சதா தெய்வீகத்தன்மையை உள்வாங்க (கிரஹிக்க) கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக.

பாப்தாதாவின் மூலம் பிறந்ததுமே ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தெய்வீக புத்தி என்ற ஆசீர்வதாத்தை அடைகிறார்கள். யார் இந்த தெய்வீக புத்தியின் வரதானத்தை எந்தளவு காரியத்தில் பயன்படுத்துகிறார்களோ, அந்தளவு வெற்றி மூர்த்தி ஆகிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு காரியத்திலும் தெய்வீகத் தன்மை தான் வெற்றிக்கு ஆதாரமாக இருக்கிறது. தெய்வீக புத்தியை அடையக் கூடிய ஆத்மாக்கள் தெய்வீகத்தன்மையற்ற ஆத்மாக்களையும் தெய்வீக மானவர்களாக மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தெய்வீகத் தன்மையை கிரகிக்கிறார்கள். தாக்கம் தெய்வீக புத்தியுடைவர்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தாது.

சுலோகன்: தன்னை விருந்தாளி எனப் புரிந்துக் கொண்டு இருந்தால் மனநிலையையும் அவ்யக்த் மற்றும் மகான் தன்மையுடைவராக மாறிவிடலாம்.